OS.No. 117/2010

Dated : 13.02.2024

Time: 12.55 pm to 1.05 p.m

P.W-1 சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் சார்பாக குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) மேற்படி மேரிக்கு வாரிசு இல்லாததால் அவருக்கு சொத்தில் பாகம் இல்லை என்றால் சரியல்ல. 7ம் வாதி திருமணம் ஆகாமல் காலமாகிவிட்டார். மேற்படி நபர்கள் இறந்துவிட்டதால் 7 பாகம் கோரிய நான் தற்போது 5 பாகங்களாக பிரிக்க வேண்டும் என்று சொல்கிறேன். எனவே வாதிக்கு 4 பாகமும், பிரதிவாதிகளுக்கு 1 பாகமும் கேட்கிறேன் என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு நான் வழக்குரையில் அது குறித்து நான் திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) மேற்படி 1ம் பிரதிவாதியின் கணவர் நிலங்களை சீர்படுத்தினார் என்றும் அவர் தான் அந்த இடத்தை அனுபவித்து வந்தார் என்றும் அதனால் அந்த சொத்தை நாங்கள் வாய்மொழியாக விடுதலை செய்து கொடுத்துவிட்டோம் என்றும் அதை அவர் முழு உரிமையாளராக அனுபவித்து வந்தார் என்றால் அது தவறு. மேற்படி பிரதிவாதிகள் உரிமை மூலம் கோரி எதிரிடை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதற்கு நாங்கள் எதுவும் மறுப்புரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3) மேற்படி பிரதிவாதிகளின் எதிரிடை வழக்கிற்கு நாங்கள் மறுப்புரை தாக்கல் செய்யாததால் பிரதிவாதிகள் வழக்குரையை நாங்கள் ஏற்றுக்கொண்டோம் என்றால் அது தவறு. தாவா சொத்துக்கள் எங்களுடைய குடும்ப பூர்வீக சொத்துக்கள் என சொல்லியுள்ளோம். ஆரம்பத்தில் இருந்தே வாதி வெளியூரில் இருந்தோம் என்றால் அது தவறு. மேற்படி நாங்கள் தாவா சொத்து ஊரில் இருந்தோம் என்பதற்கு எந்த ஆவணத்தையும் முன்நிறுத்தவில்லை என்றால் அது தவறு.

4) மேற்படி தாவா சொத்தின் அனுபவத்தில் நாங்கள் இல்லாததால் இருப்பதாக சொல்லி நாங்கள் செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறானது என்றும் எனவே

இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் அது தவறு. மேற்படி எல்லா உண்மையையும் மறைத்து வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் அது தவறு.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan**
**Subordinate Judge, Attur.**